# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1873/3 - 2014 ජූලි මස 28 වැනි සඳුදා - 2014.07.28

*1873/3 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மாகாண மாகாண சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1939 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.

2. வட மாகாணத்தின் முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, சமூக நலத்துறை, கைத்தொழில், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1939 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆவது பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவிற்கு அமைவாக கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள்/குற்றச்சாட்டுகள் தொடர்பாக வல்வெட்டித்துறை நகர சபையின் செயற்பாடுகளை ஆராய்ந்து பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 1939 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க. நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயயம்) 184 ஆம் பிரிவின் (1ஆ) (அ) ஆம் உப பிரிவிற்கமைவாக தனி நபர் விசாரணை சபை ஒன்றிற்கு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்ற நீதவான் திரு. கந்தையா அரியநாயகம் அவர்களை நியமித்துள்ளேன்.

3. விசாரணை செய்யப்படவேண்டிய விடயங்கள்/குற்றச்சாட்டுகள் :-

(i) சபை கூட்டத்தீர்மானம் மூலம் சபையினை இயங்க முடியாத நிலைமைக்கு உட்படுத்தியமை ;

(ii) கூட்டங்களைக் கூட்ட அல்லது அதில் சமுகமளிக்க அல்லது கூட்டப்படும் கூட்டத்தில் வாக்களிக்க அல்லது எந்தவொரு கூட்டத்திலும் ஒரு கருமத்தை நடாத்த விடாப்பிடியாக மறுத்தல் ;

(iii) நகரசபை கட்டளைச் சட்டத்தால் விதிக்கப்பட்ட கடமைகளை வேண்டுமென்றே கவனயீனமாக விட்டும் அல்லது அக்கடமைகளை ஆற்றும்போது ஒழுங்கீனமாக நடத்தல் ;

(iv) திறமையற்றும் முறைகேடாகவும் முகாமை செய்தல் ;

(v) நகரசபை கட்டளைச் சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களை தவறாக பிரயோகம் செய்தல்.

4. வட மாகாணத்தின் முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, சமூக நலத்துறை, கைத்தொழில், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சராகிய நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1939 ஆம் ஆண்டின் 67 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆம் பிரிவின் (1), (1ஆ) (அ) (iii) ஆம் உபபிரிவுகளின் கீழாக எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தின் வல்வெட்டித்துறை நகரசபையின் நடவடிக்கைகள் உடன் அமுலுக்குவரும் வண்ணம் இடைநிறுத்தப்படுகிறது. சபையின் இடைநிறுத்தப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் யாழ்ப்பாண மாவட்டத்தின் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரான திரு. கொன்ஸ்ரன்ரைன் ஜக்சீல் அவர்களுக்கு கட்டளை இடப்படுகின்றது.

நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்,
முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும், சட்டமும்
ஒழுங்கும், காணி, சமூக நலத்துறை, கைத்தொழில்,
கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்குப்
பொறுப்பான அமைச்சர்,
வட மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
இல. 26, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்,
2014, யூலை 25.

8- 464

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.